# மீள்குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்தியன் வீட்டுத்திட்டமும் வாழ்வாதார அபிவிருத்தியில் ஏற்பட்ட மாற்றமும் முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவிபுரம் கிராமம் பற்றிய சிறப்பு பார்வை

*கல்யாணி. ந ,சுபாஜினி.உ

புவியியற்றுறை, கலைப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*kalyani_kalya@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

வாழ்வாதாரம் என்பது மக்களையும்,அவர்களது வல்லமைகள், உணவு, வருமானம், சொத்துக்கள் உட்பட அவர்கள் வாழும் வழிகளையும் உள்ளடக்கியுள்ளது. அந்தவகையில் மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகவும் வாழ்வாதாரத்தின் விருத்திக்கு அடிப் படையாகவும் வாழிடம் காணப்படுகின்றது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டமானது யுத்தத்தின் பல்வேறு அழிவுகளுக்கு உட்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றது. யுத்தம் முடிவடைந்த பின்னர் பல்வேறு நிறுவனங்களின் உதவியுடன் வீடமைப்புத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தவகையில் இந்தி யன் வீட்டுத்திட்டத்தினால் தேவிபுரக் கிராம மக்களுக்கு வழங்கப்பட்ட வாழிடங்களினால் அம்மக்களது வாழ்வா தாரத்தில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை மதிப்பீடு செய்துகொள்வதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது வழங்கப்பட்ட இவ் வீடமைப்புத்திட்டம் சரியான இலக்குப்பிரிவினரைச் சென்றடைந்துள்ளதா? மீள்குடியேற்றத்தின் பின்னர் வீடமைப்புத்திட்டத்தினால் அம்மக்களது வாழ்வாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? இவ் வீடமைப்புத்திட்டம் மக்களது தேவையை எந்தளவிற்கு பூர்த்திசெய்துள்ளது? என்பவற்றை அறியும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்கான தரவுகளும் தகவல்களும் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளுக்கூடாக சேகரிக்கப்பட்டது. முதலாம் நிலைத் தரவுகள் நேர்காணல்,அவதானம்,வினாக்கொத்து மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகள் பிரதேச செயலக அறிக்கை, கிராம சேவையாளர் அறிக்கை மூலமும் பெறப்பட்டன. முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைக்கூடாக பெறப்பட்ட தரவுகள் விபரணப்பகுப்பாய்வு முறை மூலம் பகுப்பாய்வு செய்யப் பட்டன. தரவுகள் கணிதவியல் நுட்பமுறை மூலம் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு விபரணப் பகுப் பாய்வுமுறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. முடிவுகளின்மூலம் வீடமைப்புத்திட்டத்தின் இலக்குப்பிரிவினர்,பயனாளிகள் தெரிவுத்தன்மையில் முற்றுமுழுதான உண்மைத்தன்மை காணப்படாத நிலையையும் இக்கிராமமானது வீடமைப்புத்திட்டம் வழங்கப்பட முன்னர் பொருளாதார ரீதியில் விருத்தி பெற்றிருந்தாலும் பௌதிக உட்கட்டமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பில் பின்னடைவான நிலையிலேயே காணப்பட்டது.எனினும் தற்காலத்தில் முன்னரை விட பௌதிக உட்கட்டமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பில் விருத்தியடைந்துள்ள போதிலும் பொருளாதார ரீதியில் பின்னடைவான நிலையிலேயே காணப்படுகின்றது. அதாவது இவ்வீடமைப்புத்திட்டம் மக்களை கடனாளி களாகவும், ஏழைகளாகவும் மாற்றியுள்ளது. வசதி படைத்தவர்களுக்கு இவ்வீட்டுத்திட்டம் ஒரு வாய்ப்பாக அமைந்தபோதும் வறியவர்களுக்கு ஓர் சுமையாகவே உள்ளது. இதனால் இவ்வீட்டுத்திட்டம் எல்லா மக்களுக்கும் பூரண திருப்தியளிக்கவில்லை என்பதே இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவாக உள்ளது. பெறப்பட்ட முடிவு களினை அடிப்படையாகக் கொண்டு கிராமத்தின் விருத் திக்காக பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்**-வீட்டுத்திட்டம்,வாழ்வாதாரம்,அபிவிருத்தி

## 1. ஆய்வு அறிமுகம்

உலகின் சனத்தொகை இன்று மிக வேகமாக அதிகரித்துவரும் நிலையில் மக்கள் தேவைகளும் பல மடங்காக அதிகரிக்கின்றது.மனிதவளம் வரை

யறையின்றி அதிகரிக்கும்போது இயற்கை வளங்கள் வரையறையுடையனவாகக் காணப்படுகின்றது. இதனால் வளங்களை நுகர்வது தொடர்பில் போட்டிகள் ஏற்பட்டு அவை முரண்பாடுகளையும் அனர்த்தங்களையும் ஏற்படுத்துகின்றது.இந்நிலை மனிதனின் அன்றாட வாழ்விலும் அதனுடன் இணைந்த வாழ்வாதாரத்திலும் பின்னடைவை ஏற்படுத்துகின்றது.மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் உணவு,உடை,வாழிடம் என்பன இன்றியமையாதனவாக உள்ளன. பெரும்பாலான மக்களுக்கு உணவு, உடை என்பன கிடைக்கின்ற போதும் வாழிடம் என்பது அவர்களின் பொருளாதார நிலைக்கேற்ப கிடைக்கும் மட்டம் குறைவாகவே உள்ளது.அத்துடன் யுத்தங்கள் மற்றும் அனர்த்தங்களும் மக்களது வாழிட நிலையை பாதிப்பதாக உள்ளது.

அனர்த்தங்கள் யுத்தங்கள் என்பன பல உயிரிழப்புக்களையும்,உடமையிழப்புக்களையும் ஏற்படுத்துவதாக உள்ளது.உயிரிழப்புக்களை புதுப்பிக்க முடியாத நிலை காணப்பட்ட போதும் உடமையிழப்புக்கள் ஓரளவு புதுப்பிக்கக்கூடியதாக உள்ளது.அந்தவகையில் அனர்த்தங்களின் பின்னர் ஏற்படும் இழப்புக்களை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பல மீள்வாழ்வளிப்பு திட்டங்கள் மூலம் நிறைவேற்றுகின்றது.

அந்தவகையில் இலங்கையில் கடந்த 30 வருடகால யுத்தமானது 2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த நிலையில் பல்வேறு அழிவுகளையும், இழப்புக்களையும் சந்தித்துள்ளது.இவ்வாறான அழிவுகளை பல அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள் அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் ஓரளவிற்கு நிவர்த்திசெய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.அந்தவகையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவிபுரம் கிராமத்தில் ஏற்பட்ட வாழிடங்களின் அழிவுகளை இந்தியன் வீட்டுத் திட்டமானது நிவர்த்தி செய்து வருகின்றது.அந்தவகையில் ஆய்வுப்பிரதேசமான தேவிபுரம் கிராமத்தில் 464 வீடுகள் இந்தியன் வீட்டுத்திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வீடமைப்புத்திட்டம் சில நியமங்களைக் கொண்டு பயனாளிகளைத் தெரிவுசெய்தமை, வரையறுக்கப்பட்ட நிதிக்குள் வீட்டினைக்கட்டி முடிக்க வேண்டிய நிலை மற்றும் குறித்த கால வரை றறைக்குள் கட்டிமுடிக்க வேண்டிய நிலை,மக்களின் விருப்பங்களை கருத்தில் எடுக்காத தன்மை என்பன இத்திட்டம் பூரண வெற்றிபெறுவதற்கு தடைக்கற்களாகக் காணப்பட்டன.

அந்தவகையில் தேவிபுரம் கிராமத்தில் வழங்கப்பட்ட வீடமைப்புத்திட்டம் ஓரளவு வருமானம் உடைய வர்களுக்கு திருப்தியைக் கொடுத்தாலும் குறைந்த வருமானமுடைய மக்களுக்கு பூரணதிருப்தியை ஏற்படுத்தவில்லை.இத்திட்டத்திற்காக வழங்கிய வரையறுக்கப்பட்ட நிதியானது இப்பிரதேச மக்களை வறியவர்களாகவும், கடனாளிகளாகவும் ஆக்கியுள்ளது. அந்தவகையில் இவ்வீட்டுத் திட்டமானது பூரண வெற்றியை பெறவில்லை என்றே கூறலாம்.எனவே இத்தோல்விக்கான காரணங்கள் மதிப்பிடப்பட்டு எதிர்காலத் திட்டங்களாவது மக்களுக்கு பூரண திருப்தியை ஏற்படுத்தும் வகையில் சில பரிந்துரைகளை முன்வைப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

## 2.ஆய்வின் நோக்கம்

இவ் ஆய்வின் நோக்கங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

- சரியான இலக்குப் பிரிவினரை அல்லது பயனாளிகளை இவ்வீட்டுத்திட்டம் சென்றடைந்துள்ளதா? என்று அறிதல்.
- மீள் குடியேற்றத்தின் பின்னர் இவ்வீட்டுத்திட்டத்தால் மக்களின் வாழ்வாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? என்பதை அறிதல்.
- மக்களது தேவைகளை இவ்வீட்டுத்திட்டம் எந்தளவிற்கு நிறைவு செய்துள்ளது என அறிதல் (திருப்தி நிலை)

## 3.இலக்கியமீளாய்வு

"Managing stakeholder expectation of post disaster reconstruction project in srilanka" எனும் ஆய்வில் இலங்கையில் அனர்த்தத்தின் பின்னரான மீள்கட்டுமான பணிகளின் போது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புக்கள் எவ்வாறு காணப்பட்டது. என்பது தொடர்பான ஆய்வாக அமைந்துள்ளது.இவ் ஆய்வில் ஒரு மனிதனது வாழ்வாதாரத்திற்கு வீடு என்பது எவ்வளவு அடிப்படையானது என்பது தொடர்பான விடயங்கள் கூறப்பட்டுள்ளன [1]. இவ் ஆய்வுக்கட்டுரை ஆய்வாளனின் இரண்டாவது நோக்கமான வாழ்வாதார மாற்றம் தொடர்பான விடயங்களை விளங்கிக்கொள்ள அடிப்படையாக அமைந்தது."அனர்த்தத்தின் பின்னர் கட்டப்படும் வீடுகள் தொடர்பான திட்டமுறைச் செயன்முறைகள்"எனும் கட்டுரையில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அபிவிருத்தித்திட்டங்களில் வாழிடம் அமைத்துக்கொடுத்தலின் முக்கியத்துவம் பற்றிக் கூறப்பட்டுள்ளது [2]. அனர்த்தத்தின் பின்னர் கட்டிக்

கொடுக்கப்பட்ட வாழிடங்களைவிட முன்னர் வாழ்ந்த வாழிடங்களை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர் என்ற கருத்தைக் ஓர் ஆய்வு கூறியுள்ளது [3]. வேறு ஒரு நூலில் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படும் வீடுகள் தொடர்பான நியமங்கள், அளவீடுகள்,அவற்றின் முக்கியத்துவம் பற்றிக் கூறப்பட்டுள்ளன [4]. Hansan etal இத்திட்டம் உரிய இலக்கினை அடைந்துள்ளதா வரையறுக்கப்பட்ட நிதிக்குள் வினைத்திறனான வீடமைப்பு இடம்பெற்றதா என்பதை மதிப்பீடுசெய்வதாக உள்ளது [5] மேற்கூறப்பட்ட ஆய்வுகள் ஆய்வாளரின் நோக்கங்கள் முறையியல்கள் பகுப்பாய்வு முடிவுகள் என்பவற்றிற்கு பல வழிகளில் வழிகாட்டியாக உள்ளது.

## 4. ஆய்வுப் பிரதேசம்.

இலங்கையின் 25 மாவட்டங்களில் ஒன்றாகவும் இறுதி யுத்தத்தில் அதிக பாதிப்புக்களை எதிர்கொண்ட மாவட்டங்களில் ஒன்றாகவும் முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது. இம்மாவட்டம் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளை கொண்டுள்ளது. இதில் ஒன்றாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் காணப்படுகின்றது. இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்கும் 19 கிராமசேவகர் பிரிவில் ஒன்றான தேவிபுரம் கிராமசேவகர் பிரிவு இவ்வாய்வின் ஆய்வுப் பிரதேசமாகவுள்ளது.

ஆய்வுப்பிரதேசமான தேவிபுரம் கிராமசேவகர் பிரிவானது 19.7 சதுரகிலோமீற்றர் பரப்பைக்கொண்டுள்ளது. இப்பிரதேசம் வடக்கே சாளைக் கடலையும், கிழக்கே கைவேலிக் கிராமத்தையும், தெற்கே வள்ளிபுனத்தின் ஒரு பகுதியையும், காடுகளையும்,மேற்கே வள்ளிபுனக் கிராமத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

**உரு 1** ஆய்வுப் பிரதேச இடவிளக்கப்படம்




(மூலம்: 2011 வருடாந்த செயற்றிறன் அறிக்கையும் கணக்குகளும் - முல்லைத்தீவு மாவட்டம்)

இங்கு தற்போது 815 குடும்பங்கள் காணப்படுவதுடன் சனத்தொகையானது 2641 ஆக உள்ளது. இதில் 1273 ஆண்களும்,1368 பெண்களும் வாழ்கின்றார்கள். யுத்தத்தினால் இப்பிரதேசத்தில் வீடுகள் முற்று முழுதாகவும்,பகுதியாகவும் சேதமாக்கப்பட்டன. யுத்தத்தால் வாழிடங்களை இழந்த இக்கிராம மக்களுக்கு இந்தியன் வீட்டுத்திட்டமானது வீடுகளை வழங்கியுள்ளது. இப்பிரதேசத்தில் 499 வீடுகள் இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டது. இவற்றில் 464 வீடுகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் 35 வீடுகள் காணி உரிமை இன்மையால் ஆரம்பிக்கப்படவில்லை. தேவிபுரம் கிராமசேவகர் பிரிவானது யுத்தத்தால் அதிக பாதிப்புக்களை எதிர்கொண்டமையால் இப்பிரதேசம் ஆய்வின் நோக்கம் கருதி தெரிவு செய்யப்பட்டது.

## 5.ஆய்வு முறையியல்

ஆய்வு ஒன்றினை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு காரணமாக உள்ள ஆய்வு முறையியல் ஆனது ஆய்வுகளின் முக்கியமான பகுதியாகவும் காணப்படுகின்றது. குறிப்பிட்ட தெளிவாக வரையறுக்கப்பட்ட ஓர் பிரதேச எல்லைக்குள் காணப்படுகின்ற பிரச்சனைகளைத் தெளிவுபடுத்தும் ஓர் அங்கமாக ஆய்வு முறையியல் அமைகின்றது. ஆய்வின் பிரச்சனைகள், மற்றும் தன்மை என்பனவே ஆய்வு முறையியலைத் தீர்மானிக்கும். இங்கு ஆய்வு வகை, தரவுகளின் வகை, தரவு சேகரிக்கும் முறை, தரவுப் பகுப்பாய்வு முறை, என்பன முக்கியம் பெறும்.

இது ஒரு விபரண ரீதியான ஆய்வாகும். விபரண ரீதியான ஆய்வு என்பது ஒரு பிரச்சனை தொடர்பான பூரணமான தரவுகளைப் பெற்று அதனை விபரித்து அதற்கான பூரண விளக்கத்தினை வழங்கும் ஆய்வாகும். இதனடிப்படையில் இக்கிராமமக்களின் வாழ்வாதார நிலை யுத்தத்தின் முன்னர் எவ்வாறு இருந்தது? வீட்டுத் திட்டம் வழங்கிய பின்னர் எவ்வாறு உள்ளது? என்பன ஆராயப்பட்டு விரிவாக விளக்கம் கொடுக்கப்பட்டது. அதன் பின் அதில் ஏற்பட்ட மாற்றங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை கள் என்பன விரிவாகக் கூறப்படுகின்றது.

மொத்தக் குடியிலிருந்து அதனைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் அங்கத்தவர்களை தெரிவு செய்யும் முறை மாதிரி எடுப்பு முறையாகும். இங்கு அங்கத்தவர் தெரிவானது எழுமாற்றாக இடம்பெற்றது. எடுக்கப்படும் மாதிரிகள் மொத்தக் குடியையும் பிரதிநிதித்துவம் செய்வதாக அமைவதுடன் பெறப்படும் முடிவுகளும் மொத்தக் குடிகளுக்கும் பொதுவானதாக அமையும். இவ்வாய்வுடன் தொடர்புடைய 464 குடும்பங்களில் 70 குடும்பங்கள் மாதிரி எடுப்பு முறைமூலம் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அந்தவகையில் குறித்த கிராமத்தில் 850 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றபோது அவற்றில் 464 குடும்பங்களுக்கே வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. இக்குடும்பங்களிலிருந்து 15 வீதமான மாதிரி எடுப்பு முறையூடாக 70 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு இவ் வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

இவ் ஆய்வில் அளவுசார் தரவுகளும் பண்பு சார் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அளவுசார் தரவுகளாக வீடமைப்பு திட்டத்தின் கீழ் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை கட்டிமுடிக்கப்பட்டவீடுகளின் எண்ணிக்கை கட்டிமுடிக்கப்படாத வீடுகளின் எண்ணிக்கை வீடுகளை கட்டுவதற்கான நிதிக் கொடுப்பனவுகள் என்பனவும் பெறப்பட்டது. பண்புசார் தரவுகள் நேர்காணல் நேரடி அவதானம் போன்றவற்றின் மூலம் பெறப்பட்டன.

இங்கு முதலாம் நிலை தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகள் கிராம சேவகர், கிராம தலைவர்கள், வீடமைப்பு திட்டம் தொடர்பான மேற்பார்வையாளர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக திட்டமிடல் முகாமையாளர் போன்றோர் உடனான நேர்காணல் மூலமும் பயனாளிகளிடம் கொடுக்கப்பட்ட வினாக்கொத்தின் மூலமும் பெறப்பட்டது.இரண்டாம் நிலைத் தரவுகள் எனும் போது வீடமைப்பு திட்டம் தொடர்பான நூல்கள் கட்டுரைகள் பிரதேச செயலக புள்ளிவிபர அறிக்கை கிராம சேவகர் அறிக்கை என்பவற்றிலிருந்து பெறப்பட்டன.

ஆய்விற்காக பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு விவரண பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டது. . தரவுகள் கணிதவியல் நுட்பமூலம் (Excel) செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு விபரணப்பகுப்பாய்வுமுறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் அட்டவணைகளாகவும் வரைபடங்களாகவும் பெறப்பட்டன.

### 6.ஆய்வின் முடிவுகள்

கடந்தகால யுத்தத்தினால் பெரும்பாலான மக்களின் வாழிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன ஆய்வுப்பிரதேசத்தில் கொடுக்கப்பட்ட வினாக்கொத்துக்களின் அடிப்படையில் 11 வீதமான வீடுகள் மாத்திரம் கல்வீடாக காணப்பட்டது.வீட்டுத் திட்டம் சில நியமங்களின் அடிப்படையில் பயனாளிகள் தெரிதலை மேற்கொண்டாலும் அவை உரியமுறையில் சரியானவர்களை சென்றடையவில்லை. இந்தவகையில் வீட்டின் அழிவின் தன்மை வலுவிழந்தோர், பெண் தலைமைக் குடும்பம், அதில் தங்கி வாழ்வோர், சிறுவர்கள் குழந்தைகள் என்பவர்களின் தொகை ஆகியவற்றிற்கு அமைய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது.இவை உண்மையில் முழுமையாகப் பாதிக்கப்பட்டவர்களை மட்டுமே சென்றடைந்ததாக கூறமுடியாத நிலை காணப்படுகின்றது. மாறாக அவை வசதியானவர்களையும் சென்ற டைந்துள்ளது.இதன் மூலம் ஆய்வின் முதலாவது இலக்காகிய சரியான இலக்குப் பிரிவினரை அல்லது பயனாளிகளை இவ்வீட்டுத்திட்டம் சென்றடைந்துள்ளதா? என்று அறிதல் எனும் நோக்கம் அடையப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆய்வுப்பிரதேச மக்களின் சமூக, உட் கட்டமைப்பு (கிணறு,மலசலகூடம், வீதிகள்) வசதிகளில் முன்னேற்றம் காணப்பட்ட போதும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையே காணப்படுகின்றது. இது மக்களின் வாழ்வாதாரத்தில் முற்றுமுழுதான விருத் தியை ஏற்படுத்தவில்லை. இதன் மூலம் ஆய்வின் இரண்டா வது இலக்காகிய மீள் குடியேற்றத்தின் பின்னர் இவ்வீட்டுத் திட்டத்தால் மக்களின் வாழ்வாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? என்பதை அறிதல் எனும் நோக்கம் அடையப்பட்டுள்ளது.

வீட்டுத்திட்டம் வருமானம் குறைந்த மக்களை மேலும் வறுமைக்குள் தள்ளியுள்ளது.இதனால் அவர்களின் வாழிடம் பூர்த்தி செய்யப்படவில்லை வருமானம் கூடிய மக்கள் வீட்டினை பூரணப்படுத்தியதுடன் அதனை பெருப்பித்தும் கட்டியுள்ளனர் எனினும் எல்லா பயனாளிகளிற்கும் வீட்டினை பெருப்பித்துக்கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் அதிக அங்கத்தவர்களை கொண்ட குடும்பத்தினருக்கு போதாமையாக உள்ளதுடன் வழங்கப்பட்ட வீட்டின் ஒரு அறை ஆறு அடி அகலம் கொண்டதாக காணப்பட்டமை மக்களிற்கு போதிய திருப்தியைக் கொடுக்கவில்லை. கட்டம் கட்டமாக வழங்கப்பட்ட நிதி, வரையறுக்கப்பட்ட நிதி குறித்த காலத்தில் கட்டிமுடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் என்பன மக்களிற்கு மன அழுத்தத்தையும். வறுமையையும் தோற்றுவித்துள்ளது. யுத்தத்திற்கு முற்பட்ட காலங்களை விட வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டமையால் கடன் சுமையால் மனஉளைச்சலுக்கும், நோய்த்தாக்கத்திற்கும் அதிகம் உள்ளாகியுள்ளனர்.அரசினால் வழங்கப்பட்ட காணிகளில் மழைகாலங்களில் நீர் தேங்கி நிற்பதனால் அதனை சீர் செய்வதற்காக அதிகம் செலவிட நேர்ந்துள்ளது. இவ் வீட்டுத்திட்டம் வசதி படைத்த மக்களிற்கு திருப்தியளித்த போதும் மிகவும் வறிய மக்களிற்கு அதிருப்தி நிலையையே ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் ஆய்வின் மூன்றாவது இலக்காகிய மக்களது தேவைகளை இவ்வீட்டுத்திட்டம்

எந்தளவிற்கு நிறைவு செய்துள்ளது என அறிதல் (திருப்தி நிலை) எனும் நோக்கம் அடையப்பட்டுள்ளது.

| கடன் தொகை(/=) | வீட்டுத்திட்டத்திற்கு முன்னர் குடும்ப எண்ணிக்கை (வீதம்) | வீட்டுத்திட்டத்திற்கு பின் குடும்ப எண்ணிக்கை (வீதம்) |
|---|---|---|
| 50000 | 1.42 | 7.14 |
| 100000 | 0 | 15.71 |
| 200000 | 0 | 30 |
| 300000 | 0 | 10 |
| 400000 | 0 | 12 |

**கடன் நிலை**




**உரு 2** மூலம்-கள ஆய்வு 2014

**7.ஆலோசனைகள்**

ஆய்வுப்பிரதேசத்தில் அமைத்துக் கொடுக்கப்படும் வீடுகளின் வடிவமைப்பு தொடர்பில் மக்களின் விருப்பம் கருத்திலெடுக்கப்பட வேண்டும். பயனாளிகளை தெரிவு செய்யும் போது பூரண உண்மைத் தன்மையினை கருத்திலெடுக்கப்பட வேண்டும். பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள் அநாதைகள், வலுவிழந்தவர்கள் போன்றோரை வலுவூட்டி ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட வேண்டும். வீட்டுத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதியினை வினைத்திறனாகவும் உத்தமமாகவும் பயன்படுத்த மக்களிற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.குறித்த பிரதேச மக்களின் தேவைகள் விருப்பங்கள் அறியப்பட்டு அவற்றிற்கான தீர்வுகள் வழங்கப்படவேண்டும்.திட்டத்தின் ஒவ்வொரு படிநிலையிலும் பயனாளிகளை உள்வாங்குவதுடன் அவர்களை அதில் திட்டத்தின் பங்காளர்களாக அடையாளப்படுத்தி அவர்களை சிறந்த தலைமைத்துவம் பெறக்கூடியவகையில் அணிதிரட்டல் வேண்டும்.

வீடமைப்பு திட்டத்துடன் இணைந்தவகையில் உட்கட்டுமான விருத்திகளை மேற்கொள்ளல் வேண்டும் அரசினால் வழங்கப்பட்ட காணிகளிற்கான உறுதிகள் வழங்கப்படாமையால் மக்கள் அக்காணியில் அபிவிருத்திச் செயற்பாடுகளை செய்ய அஞ்சுகின்றனர். எனவே இக் காணிகளிற்கான உறுதிப்பத்திரம் உடனடியாக வழங்கவேண்டும். வழங்கப்பட்ட இக்காணிகளின் பரப்புக்கள் குறைவாக உள்ளதுடன் வாழிடங்கள் அருகருகாக அமைக்கப்பட்டுள்ளது இதனால் சமூக சீரழிவுகள் முரண்பாடுகள், தொற்று நோய்கள் ஏற்படுகின்றன.எனவே இது தொடர்பில் மக்களிற்கு ஆற்றுப்படுத்துகை விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படவேண்டும்.வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட காலத்தில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தல் இடம் பெற்றது. இது தொடர்பில் நிறுவனங்கள் அவற்றைக் கருத்திலெடுக்கவேண்டும்.

வீட்டுதிட்டத்துடன் இணைந்தவகையில் கால்நடை வளர்ப்பு சுயதொழில் முயற்சி வீட்டுத்தோட்டம் என்பற்றை மேற்கொள்ள உதவி வழங்குவதோடு அதனை தொடர்ச்சியாக கண்காணித்தல் வேண்டும்.சுயதொழில்களை மேற்கொள்வதற்கான பயிற்சிகள் கருத்தரங்குகள் வைப்பதுடன் அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்தல் காட்சிப்படுத்தல் போன்ற வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல். நிறுவனங்கள் பயனாளிகள் தெரிவில் நியமங்களை மட்டும் கருத்தில் கொள்ளாமல் மக்களின் உண்மை நிலையை அறிந்து பயனாளிகளை தெரிவு செய்வதன் மூலம் நிலைத்திருக்கக் கூடியவகையில் திட்டங்களை நடைமுறைப்படுத்தி இவ் ஆய்வுப்பிரதேசத்தையும் பிரதேசமக்களையும் பொருளாதார ரீதியாகவும் வாழ்வாதாரரீதியாகவும் மேம்பாடடையச் செய்யமுடியும்.

**உசாத்துணைகள்**

[1] Siriwardena.N, Haigh.R , Ingirige.B “Managing Stakeholder Expectation Of Post-Disaster Housing Reconstruction Projects In Sri Lanka”, The School Of The Built Environment, University Of Salford, 2010.

[2] Kanesalingm.K.,"planning process in post - disaster housing”, planning magazine-1, geographigal society, Department of geography, university of Jaffna , 2008.

[3] http://www.biomedsearch.com/nih/Comparative-analysis-permanent-post-disaster/21054498.html

[4] Donald G.Lux Willies Ray, A Dean Hauenstein (1970), “The World Construction” , Fourth Edition Mc KNINHT & Mc KNIGHT Publishing Company Blooming, Lllionis, 1970.

[5] Gaya Hanson, Richard Lloyd, Bob Larimer “Evaluation Of The Social Housing Programme” Hanson And Associats, Linkages Consulting Inc, Larimer & Associates, 2004.